1971 டிசம்பர் 14]

3. நீரைத் தேக்குவதற்காக, சோழவரம், புழலேரி ஆகிய ஏரி களைச் சேர்ந்த ஆயக்கட்டு நிலங்களைக் கையகப்படுத்துதல்.

** 346 வினா.—***திரு. கே. எ. வகாப் :** *மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—*

(அ) ஆந்திரத்தில் உள்ள சோமசிலா அணைத்திட்டம் முடிந்த வுடன், அதிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *(அ) &(இ) கிருஷ்ணா— கோதாவரி பாசன ஆணைக்குழு அளித்த தீர்ப்பின்படி சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக 1,500 கோடி கனஅடி நீர் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 500 கோடி கன அடி நீரை சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து தர ஆந்திர மாநில அரசும் ஒப்புக்கொண்டுள்ளது. சோமசிலா திட்டம் நிறை வேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இதுபற்றி ஆந்திர மாநில அரசுடன் தொடர்பு மேற்கொள்ளப்படும்.*

திரு. கே. எ. வகாப் : *தலைவர் அவர்களே, இப்பொழுது வீராணம் ஏரிக்குக் காவிரி நீர் வருகிறது. காவிரி நீர் குறித்து நமக்கும் மைசூருக்கும் உள்ள தகராறின் காரணமாக அதனுடைய நீர் வரத்து குறையக்கூடுமோ என்று சந்தேகிக்கதக்க அளவில் இருப்பதால், சோமசிலா திட்டத்தின் மூலம் இன்னும் அதிகமான அளவில் தண்ணீரைப் பெறுவதற்கும் அதற்கு வேண்டிய திட்டங் களை மத்திய அரசையும் ஆந்திர அரசையும் நாடிப் பெற நம் முடைய அரசு முயற்சிக்குமா ?*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *வீராணம் தண்ணீர் சென்னைக்கு வருவதைப் பற்றி சந்தேகப்படத் தேவை இல்லை. இப் பொழுது மைசூருக்கும் நமக்கும் ஏற்பட்டிருக்கிற நதி நீர்ப் பிரச்சினைக்கும் இந்த வீராணம் தண்ணீரைச் சென்னைக்குப் பெறு வதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை நான் தெரி வித்துக் கொள்ளுகிறேன். அதையொட்டி, வீராணத் திட்டம் மூலம் வரும் தண்ணீர் மாத்திரம் போதாது; மேலும் சென்னைக்குத் தண்ணீர் வேண்டும் என்ற அந்த அடிப்படையில் கிருஷ்ணா— கோதாவரித் தண்ணீரை சென்னைக்கு நாம் பெற வேண்டியவர் களாகவும் இருக்கிறோம். ஆந்திர அரசு 500 கோடி கன அடி நீரை சோமசிலா நீர்த் தேக்கத்திலிருந்து தர ஒப்புதல் அளித்திருக் கிறது. சோமசிலா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர் களுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டுவிட்டன. குறிப்பாக, நிலங் களை ஆர்ஜிதம் செய்வதிலே பல இடையூறுகள் இருக்கின்றன. அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றத் தொடங்கிவிட்டால் நாம் அவர்களோடு தொடர்பு கொண்டு நமக்குத் தேவையான தண்ணீரைப் பெற இயலும்.*

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சோமசிலா திட்டத்திலிருந்து நமக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ஆந்திர அரசு ஒப்புக் கொண்டாலுங்கூட, அதற்காகச் செலவாகின்றதில் ஒரு தொகையை தமிழ் நாடு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏதாகிலும் கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், முன்னால் ஆந்திராவினுடைய முதலமைச்சரிடத்தில் பேசுகிற நேரத்தில் அதுபோன்ற ஒரு கருத்தை அவர்கள் சாதாரணமாக வெளியிட்டார்களே அல்லாமல், வலியுறுத்தி ஒன்றும் எடுத்துச் சொல்லவில்லை. சோமசிலா நீர்த் தேக்கம் அங்கு தொடங்கப்பெற்றதும் நாம் தண்ணீர் பெறுவதற்கு வழி இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சோமசிலா நீர்த்தேக்கத்திற்கு ஆகக்கூடிய பரிபூரணச் செலவைக்கூட தமிழக அரசு ஏற்றுக் கொண்டால் அதிகமாகத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று சில நாட்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அத்துடன், கிருஷ்ணாவிலிருந்து வேறு முறையிலும் தண்ணீர் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நம்முடைய அரசு ஆந்திர அரசோடு கலந்து யோசிக்குமா

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் கேட்ட கேள்வியையொட்டி பதிலளிக்கின்றேன். அந்த சோமசிலா நீர்த்தேக்கம் கட்டுவதற்கு நாம் பங்குத் தொகை செலுத்திவிடலாம். சோமசிலா திட்டத்திலிருந்து நாம் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அந்தத் திட்டத்திலே செய்யவேண்டிய மாறுதல்களுக்காக நாம் ஓரளவுக்கு அந்தப் பணத்தை அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதை நாம் மறுக்கவில்லை. அவைகளைப்பற்றியெல்லாம் இப்போதே நாம் உடனடியாக எதுவும் கணக்கிட்டுச் சொல்வதற்கில்லை. அந்தத் திட்டத்திற்கு என்ன செலவு ஆகிறது என்பதைப் போன்ற விவரங்களையெல்லாம் அவர்கள் அளித்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

தமிழ்நாடு அரசுச் செய்திப்படங்கள்

* 347 வினா.—**திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் செய்திப் படங்களைக் கிராமப்புறங்களில் காட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.